
# தமிழ் முரசு



பதிப்பாசிரியர்:

ம.பொ.சிவஞான கிராமணியார்



தயார்!
செப்டம்பர் 46.
பிரம்மரிஷி
விஸ்வாமித்ரா
T.R. ராஜகுமாரி.. N.R. நளினி.. K.R. ராம்ஸி
புளிமூட்டை... ஆள்வார்... T.V. சேதுராமன்.. கோசல்ரா
T.E. கிருஷ்ணமாச்சாரி... T. சேதுராம்... R.S. ராமசாமி...
T.D.G. பாகவதர் நடித்தது...
டைரக்ஷன் ....... ஜகன்னாத்
பாட்டு.. சிவன்... சங்கீதம்
ஸ்டுடியோ... ப்ரபாகர்
Contact
THE SOUND SHADOW PRODUCTIONS, LTD.,
13, KONDI CHETTI St. G.T. MADRAS

# தமிழ்முரசு

ஐந்தாவது புத்தகம்


பதிப்பாசிரியர் :

ம. பொ. சிவஞான கிராமணி



விலை நான்கணா

வெளி நாடு ஐந்தணா

233, லிங்கி செட்டி தெரு,

சென்னை—1

# பொருளடக்கம்

பக்கம்


| | | |
|---|---|---|
| முரசு கொட்டுது கேளடா! | .... கா. தங்கவேலன் | 3 |
| பாவலர் போற்றும் பாரதி | .... | 5 |
| புதிய தமிழகம் | .... ம. பொ. சி. | 6 |
| வேண்டியது தமிழரசே! | .... ,, | 13 |
| தமிழ் முரசு | .... மு. கோவிந்தசாமி | 17 |
| கூடுவிட்ட குருவிக்குஞ்சு! | .... வ. உ. சி. சு. | 22 |
| உழைப்பில்லாச் சுகம் | .... போ. குருசாமி | 25 |
| பாரதியின் வாழ்த்து | .... ம. பொ. சி. | 37 |
| திராவிடர்: உழைப்பாளிகள் | .... ஜி. ஏ. கிரீயர்ஸன் | 46 |



1946-ம் வருடம் செப்டம்பர் மாதம்
உரிமை பதிவு செய்யப்பட்டது

# முரசு கொட்டுது கேளடா!

க. தங்கவேலன்

முரசுகொட்டுது முரசுகொட்டுது முரசுகொட்டுது கேளடா!
முட்டிஎட்டுத் திக்குமெட்ட முரசுகொட்டுது கேளடா!
அரசுபற்றிட ஆர்வமுற்றிட ஆண்மைபொங்கிய தமிழகம்
ஆண்மைகொண்டு முரசுகொட்டி ஆர்ப்பரிப்பது பாரடா!

திட்டமான வீரமுண்டு தீரமுண்டு நெஞ்சிலே;
திண்மையுண்டு சக்தியுண்டு வன்மையுண்டு தோளிலே
முட்டிலாத செல்வமுண்டு; மூடிவைத்துப் பூட்டிட
மூர்க்கரில்லை தமிழகத்தில் முரசுகொட்டுது கேளடா!

வாழ்வில்உண்மை காணுதற்கு வண்ணமுண்டு கண்ணிலே;
வண்ணம் தீட்டி எண்ணமூட்ட வன்மையுண்டு நெஞ்சிலே;
பாழ்படுத்திப் பரிட்சைதேறிப் பதவியேறி ஆண்டிடப்
பட்டமில்லை தமிழகத்தில் பறைமுழக்கம் கேளடா!

நீதிகண்டு வாழுதற்கு நேர்மையுண்டு நெஞ்சிலே;
நேசமாக ஒன்றிவாழ நேயமுண்டு எங்கணும்;
சாதிதோறும் வேறுபேசி சண்டைமூட்டிப் பார்த்திடச்
சட்டமில்லை தமிழகத்தில் சங்கநாதம் கேளடா!

கொடுமையான வயிற்றுப்போட்டி கொஞ்சம்கூட இல்லையே
குலவும்இன்பக் காதலுக்குக் கூறஎல்லை இல்லையே
கடுமையாகத் தாக்கிப்பேசிக் காலம்கொன்று செத்திடக்
கட்சியில்லை தமிழகத்தில் கர்மவீரர் நாடடா!



சி. சுப்பிரமணிய பாரதியார்

# பாவலர் போற்றும் பாரதி

படித்தறியா மிகஏழைக் கிழவனேனும்
பாரதியின் பாட்டிசைக்கக் கேட்பானாகில்
துடித்தெழுந்துத் தன்மெலிந்த தோளைக் கொட்டித்
தொளைமிகுந்த கந்தலுடைச் சுருக்கிக் கட்டி
எடுத்தெறிய வேணுமிந்த அடிமை வாழ்வை
இப்பொழுதே இக்கணமே என்றெண் ணூர்த்து
அடித்துரைத்து ஆவேசம் கொள்வா னென்றால்
அப்பாட்டின் பெருமைசொல யாரேவல்லார்.

—நாமக்கல் கவிஞர்.

வாளேந்து மன்னர்களும் மானியங்கொள் புலவர்களும்
மகிழ்வாய் அந்நாள்
தாளேந்திக் காத்தநறுந் தமிழ்மொழியைத்
தாய் மொழியை உயிரை இந்த
நாளேந்திக் காக்குநர்யார்? என அயலார்
நகைக்கும் போழ்தில்
தோளேந்திக் காத்தஎழிற் சுப்ரமண்ய
பாரதியார் நாமம் வாழ்க!

—பாரதி தாசன்.

அச்சத்தை ஓட்டி, அடிமைத்தளை போக்கித்
துச்ச நினைவுகளைத் தூரறுத்து—மெச்சவே
ஞாலத்தி லோங்கநம் நாட்டை யெழுப்பினான்
காலத்தை வென்ற கவி.
வெற்றி முழக்குங்கள்! வெண்சங்கம் ஊதுங்கள்!
பெற்றதா யின்புகழைப் பேசுங்கள்—சுற்றிலும்
பாரதத் தாயின் படாம்விரித் தாடுங்கள்!
பாரதியார் பாட்டைப் படித்து.
'எல்லாரும் ஓர் குலமே' என்று முரசடித்துப்
பொல்லாத வேற்றுமையைப் போக்கினான் - சொல்லின்
அருவியாய் வந்தான் அமரகவி; வீரத்
திருவின் வெடித்தெழுந்த தீ.

—சுத்தானந்த பாரதியார்.

# புதிய தமிழகம்

ம. பொ. சிவஞானம்

பழந் தமிழ் நாடு இன்று பல பிரிவுகளாகச் சிதறுண்டு கிடக்கின்றது. இதில் ஒரு பெரும் பகுதி பிரிட்டிஷ் இந்தியாவிலும், மற்றோர் பகுதி சமஸ்தான இந்தியாவிலும், இன்னொரு பகுதி பிரெஞ்சு இந்தியாவிலுமாக இருக்கின்றன.

மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கும் வேலை அடுத்த டிசம்பரில் அரசியல் நிர்ணய சபை கூடியதும் ஆரம்பமாகப் போகிறது. இதை முன்னிட்டு ஒவ்வொரு மொழியினரும் தங்கள் தங்கள் நாட்டின் எல்லை இதுவென நிர்ணயிக்க முனைந்து விட்டனர். முக்கியமாக ஆந்திர, கன்னட, கேரள, மகாராஷ்டிர மாகாணங்களின் அரசியல் தலைவர்கள் இத் துறையில் கட்சி வேற்றுமை யின்றி கை கோர்த்து வேலை செய்கின்றனர். அங்கெல்லாம் எல்லை நிர்ணயக் கமிட்டிகளும் அமைக்கப்பட்டு விட்டன. எனவே, தமிழர்களாகிய நாமும் நமது சிதறுண்ட பகுதிகளை ஒன்றுக்கி ஓர் புதிய தமிழகத்தைக் காண்போமாக !

தமிழகத்தின் வடக்கெல்லை திருப்பதி எனப்படும் வட வேங்கடமே யாகும். இதை இரண்டாயிர மாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பெரும் புலவர் பனம்பாரனர்,

> " வடவேங்கடந் தென் குமரி ஆயிடைத்
> தமிழ் கூறு நல்லுலகம்"

என்று தொல்காப்பியத்திற்குத் தாம் இயற்றிய பாயிரத்துள் பாடியுள்ளார். சமீப காலப் புலவராகிய பாரதியாரும்,

> நீலத் திரைகட லோரத்திலே—நின்று
> நித்தந் தவஞ்செய் குமரி யெல்லை—வட
> மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
> மண்டிக் கிடக்குந் தமிழ் நாடு

என்று பாரறியப் பறை சாற்றினர்.

ஆனால், இந்த வடவேங்கடம் இன்று ஆந்திர மாகாணத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. சென்னை மாகாணத்தில் தற்போதுள்ள ஜில்லாக்களின் பிரிவினை அதில் வாழும் மக்களின் சம்மதத்தின்மீது செய்யப்பட்டதல்ல. ஆளப்படுவோரின் சம்மதமின்றி ஆளுவோரால் செய்யப்பட்டதேயாகும். ஆகவே, மொழிவாரி மாகாணங்களைப் பிரிக்கையில், ஒரு பிரதேசம் எந்த இனத்திற்கு உரியதென்பதை தற்போது அதில் வாழும் மக்களின் விருப்பத்தையும் அதனுடைய நீண்ட கால சரித்திரத்தையும், இலக்கியச் சான்றுகளையும் ஆதாரமாகக் கொண்டே முடிவு செய்ய வேண்டும். இதற்கு விரோதமாக செய்யப்படும் எந்த முடிவும் நிலைத்து நிற்காததோடு, மேற்கொண்டு உள்நாட்டுப் பகைமைக்கு வித்திடுவது போலுமாகும்.

தமிழ் நாட்டின் நீண்ட கால இலக்கியங்களில் காணப்படும் வரலாறுகளின்படி, தமிழ் நாட்டின் வடக்கெல்லை திருப்பதி என்பது திருத்தத்திற்கு இடமில்லாத ஓர் தீர்ப்பாகவே கொள்ளவேண்டும்.

இதுநிற்க, தமிழ் நாட்டின் தென்மேற்கில் சில பகுதிகள் இன்று திருவாங்கூர் சமஸ்தானத்தில் அடங்கி இருக்கிறது. திருவாங்கூர் சமஸ்தானத்தில் மலையாளிகளே பெருவாரியாக வசிக்கின்றனர். அதை யாளும் மன்னரும் மலையாளியேயாவார். இந்தக் காரணத்தால் ஐக்கியக் கேரளத்தை விரும்பும் கேரளத் தலைவர்கள் முழு திருவாங்கூரும் ஐக்கிய கேரளத்தில் சேரவேண்டும் என முழக்க மிடுகின்றனர். "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்ற வகையிலேயே அவர்கள் வாதமும் அமைந்துள்ளது. ஆனால் நல்ல வேளையாக திருவாங்கூரில் வாழும் வீரத் தமிழர்கள் "தமிழ் நாடு - தமிழருக்கே" என்று எழுச்சி கொண்டு கிளர்ச்சி செய்கின்றனர். "திருவாங்


கூர் தமிழர் காங்கிரஸ்" என்ற ஸ்தாபனமும் அமைந்து விட்டது. அவர்களது கிளர்ச்சி வெற்றி பெறுவதாகுக.

தமிழ் நாட்டின் தென்மேற்கெல்லையைப் பற்றி வாதப் பிரதிவாதங்கள் வலுத்து விட்டதால் அவ் விஷயத்தைச் சிறிது விரிவாக ஆராய்வது அவசியமாகும்.

திருவாங்கூரின் மொத்த ஜனத் தொகை 1941-ம் ஆண்டு கணக்குப்படி அறுபது லட்சத்தி ஏழாயிரம். இதில் தமிழர்கள் சுமார் பதினைந்து லட்சம். மலையாளிகள் நாற்பத்தைந்து லட்சம். பிற மொழி பேசுவோர் ஏழாயிரம். தமிழர்கள் பெருவாரியாக வசிக்கும் ஊர்களும் அந்தந்த ஊர்களின் மொத்த ஜனத் தொகையில் தமிழர்களின் விகிதாசாரமும் பின்வருமாறு:—

| ஊர். | விகிதம் |
|---|---|
| தோவாளை | 99·7% |
| அகஸ்தீஸ்வரம் | 97·3% |
| கல்குளம் | 83% |
| விளவங்கோடு | 80% |
| நெய்யாற்றங்கரை தாலுகாவின் தென் பகுதி | 80% |
| நெடுமங்காடு தாலுகாவின் கீழ் பகுதி | 60% |
| தேவிகுளம் | 54% |
| பீருமேடு | 51% |
| செங்கோட்டை | 99% |

இவ்வாறு தமிழர்கள் பெருவாரியாக வசிக்கும் பகுதிகள் தமிழ் நாட்டோடு சேர்க்கப்படவேண்டியதே. இதற்கு வசதியாக மேற்படி ஊர்கள் தமிழ் ஜில்லாக்களைச் சேர்ந்தாற்போல் இருப்பதை அடுத்துள்ள படத்தில் காணலாம்.



1. தோவாளை
௨. அகஸ்தீஸ்வரம்
3. கல்குளம்
4. விளவங்கோடு
௫. நெய்யாற்றின் கரை பகுதி
7. செங்கோட்டை
௮. தேவிகுளம்
௯. பீருமேடு.

மேற்படி ஊர்களின் மொத்த விஸ்தீரணம் இரண்டாயிரம் சதுர மைல்களாகும். (திருவாங்கூரின் மொத்த விஸ்தீரணம் ஏழாயிரத்து அறுநூற்று அறுபத்திரண்டு சதுர மைல்கள்.)

தமிழர்களுக்குரிய பகுதியில் நாஞ்சில் நாடு எனப்படும் தென் திருவிதாங்கூர் நிலவளம், படைத்தது. தமிழ் நாட்டிற்கு தஞ்சை ஜில்லா எப்படி நெற்களஞ்சியமாக விளங்குகின்றதோ அதேபோல் திருவிதாங்கூர் சமஸ்தானம் முழுவதற்கும் நாஞ்சில் நாடு நெற் களஞ்சியமாக விளங்குகிறது. சரியாகச் சொன்னால் திருவிதாங்கூர் தமிழர்கள் உழைத்துப் பயிர் செய்து அங்குள்ள மலையாளச் சகோதரர்களுக்கு உணவளித்துக் காக்கிறார்கள் என்றால் மிகையன்று. மற்றும் திருவிதாங்கூரில் தமிழர்க்குரிய தேவி குளம், பீரு மேடு ஆகிய தோட்டப் பிரதேசங்களில்தான் ரப்பர், தேயிலை ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தத் தோட்டங்களில பாடுபடும் தொழிலாளிகள் நூற்றுக்கு நூறு தமிழர்களே யாவர். இவ்வாறு திருவிதாங்கூரின் வளர்ச்சிக்கும், மலையாளிகளின் வாழ்விற்கும் உழைத்து வரும் தமிழர்களின் உரிமையை அங்கீகரிக்க மலையாளிகள் மறுப்பாராயின் இதைவிட நீதியும் நேர்மையுமற்ற செயல் வேறு ஒன்று இருக்க முடியாது.

ஐக்கிய கேரளத்தை அமைக்க திருவிதாங்கூர் மலையாளிகளுக்கு உரிமை உண்டானால், அதை எதிர்க்கும் சக்தியைத் தகர்க்க உணர்ச்சி யுண்டானால் அதே உரிமையும் உணர்ச்சியும் திருவிதாங்கூர் தமிர்களுக்கும் உண்டு என்பதை ஒப்புக் கொள்ள மறுப்பானேன்!

திருவிதாங்கூர் தமிழர் காங்கிரஸ், அங்குள்ள தமிழர்களின் சார்பாக செய்துவரும் நேர்மையான கிளர்ச்சிக்கு தமிழ் மக்கள் ஆதரவு காட்டவேண்டுவது அவசியமாகும்.

மைசூர் சமஸ்தானத்தின் ஒரு பகுதி கோலார் தங்கவயல். இங்கு சுரங்கங்களில் வேலை செய்யும் மக்கள் அனைவரும் தமிழர்களேயாவர். எனவே இந்தப் பகுதியிலுள்ள தமிழர்களுக்குத் தங்கள் வருங்கால வாழ்வை நிர்ணயித்துக்குக் கொள்ள சுய நிர்ணயம் வேண்டும். வெறும் அடிமைக் கூலிகளாக அவர்களை வைத்திருக்கும் நிலையை இனியும் அனுமதிக்கக் கூடாது. அந்தப் பிரதேச மக்கள் வருங்காலத்தில் தாங்கள் எந்த மாகாணத்துடன் சேர விரும்புகின்றனர் என்பதைத் தெரிவிக்க அவர்களுக்கு சந்தர்ப்ப மளிக்கவேண்டும். அத்தகைய உரிமையைப்பெற கோலார் பிரதேசத்துத் தமிழர்களும் ஒன்றுபட்டு கிளர்ச்சி செய்யவேண்டியது அவசரமும் அவசியமுமாகும்.

பிரெஞ்சிந்தியாவில் புதுவை, காரைக்கால் ஆகிய ஊர்கள் தமிழருக்கே உரியவை. இந்த உண்மையை பிரெஞ்சு இந்திய கவர்னரும் ஒப்புக்கொண்டதால் அதைப்பற்றிய பிரச்னை சுலபமாகிவிட்டது. ஆகவே விரைவில் புதுவை, காரைக்கால் பிரதேசங்கள் தமிழகத்துடன் ஐக்கியமாவதைக் காணலாம்.

பிரிட்டிஷ் காலணியாக விளங்கும் இலங்கையின் ஒரு பகுதி யாழ்ப்பாணம். ஆனால், இந்த சிறு தீவு தமிழ் நாட்டிற்கும் இலங்கைக்கும் மத்தியில் இருக்கின்றது. இந்தத் தீவில் வாழ்வோர் அனைவரும் தமிழர்களே. யாழ்ப்பாணத்தைப் பற்றிய வரலாறுகளை தமிழ் இலக்கியங்களில் படிப்போர் எவரும் அதைத்தமிழ் நாட்டின் ஒரு பகுதியாகவே ஒப்புக் கொள்வர். எனவே யாழ்ப்பாணத்தை இலங்கையோடு விட்டு வைப்பதா ? தமிழ் நாட்டுடன் சேர்ப்பதா ? என்ற விஷயத்தில் அங்குள்ள மக்களின் அபிப்பிராயத்தை அறிந்து கொள்ளும் காலம் வந்து விட்டதாகவே நான் கருதுகின்றேன்.

தமிழ் நாட்டின் எல்லையைப்பற்றி எனக்குத் தோன்றிய எண்ணத்தை தமிழன் என்ற வகையில் எனக்குள்ள உரிமைப் படி தெரிவித்திருக்கிறேன். இவ்விஷயத்தில் இறுதியாக முடிவு செய்யவேண்டிய பொறுப்பு தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளின் கையில் இருக்கிறது. அதிலும், தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி தான் முன்னின்று முயலவேண்டும். ஏனெனில் அரசியல் நிர்ணய சபையில் தமிழ் நாட்டின் சார்பாக காங்கிரஸ்தான் பூர்ண பிரதிநிதித்வம் வகிக்கிறது. ஆனால், காங்கிரஸ் நிர்வாகிகள் இதில் எவ்வித கட்சி வேற்றுமைக்கும் இடந்தராது எல்லா கட்சியிலுமுள்ள பொறுப்பு வாய்ந்த தலைவர்களின் ஒத்துழைப்பையும் பெறவேண்டும்.

---


# தசரா & தீபாவளி பண்டிகைகள்

வருவதற்கு முன்னாடியே, மைலேயில்,
**M. நடேச அய்யர் & கோவில்**
உங்கள் மனதுக்கு பிடித்த
பட்டு சேலைகளை
பொருக்கி எடுத்துக்
கொள்ளுங்கள்.

**9, வடக்கு மாட வீதி,**
மைலாப்பூர், :: :: மதருஸ்.

புரொப்ரைட்டர்:
*W. பழனிசாமி செட்டி, M. நடேச அய்யர்.*

# வேண்டியது தமிழரசே!

ம. பொ. சி.

"தமிழரும் பிரிட்டிஷ் திட்டமும்" என்ற பெயருடன் ஒரு சிறு நூலை யான் சமீபத்தில் வெளியிட்டிருந்தேன். அந் நூலைப்பற்றி 15-9-'46-ல் "திராவிட நாட்டில்" சொன்னோம்! சொல்கிறார்கள்!! என்ற தலைப்பில் மதிப்புரை எழுதப்பட்டிருக்கிறது.

அதில், 1938-முதல் 1945-ம் ஆண்டுவரை "விடுதலை," "திராவிட நாடு" ஆகிய பத்திரிகைகளில் அவ்வப்போது வெளி வந்துள்ள கருத்துக்களை எடுத்துக்காட்டி, அதே கருத்துக் களைத்தான் காங்கிரஸ்காரனாகிய நானும் இப்போது வெளியிடுவ தாகத் தீர்ப்புக் கூறப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்பு சரிதானா? என்பதை ஆராய்வோம். எனது நூலில்,

"இந்தியாவிலுள்ள நாடுகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு இனத்தினர் வாழ்கின்றனர். அந்த இனங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி மொழி, நாகரீகம், சரித்திரம் ஆகியவைகள் இருந்து வருகின்றன."

என்ற பகுதியையும், அதற்கு ஆதாரமாக நான் காட்டி யுள்ள மேற்கோள்களையும் 'திராவிட நாடு' தனது தீர்ப்புக்குச் சாதகமாக எடுத்துக் காட்டுகிறது. மேற்சொன்ன எனது கருத் துக்கள் ஒன்றும் புதியவையல்ல. பல நூற்றாண்டுகளாக உள் நாட்டு, வெளி நாட்டு அறிஞர்கள் பலர் இந்தியாவின் இயற்கை அமைப்பை ஆராய்ந்து வெளியிட்ட உண்மையையே நான் உறுதி செய்திருக்கிறேன். அதுவே 'திராவிட நாட்'டிற்கும் உடன்பாடாயின் அதில் வியப்பொன்றுமில்லை.

ஆனால், இந்தியாவின் மேற்சொன்ன இயற்கை நிலையை சாதகமாகக் கொண்டு. வருங்கால அரசியலை வகுப்பதில் எனது நூல் பின் வருமாறு வழிகாட்டுகிறது.

"இந்திய நாடுகள் ஒவ்வொன்றும் சுதந்திரமாக இருக்கவும், இந்திய தேசீய இனங்கள் ஒவ்வொன்றும் சுயமாக முயற்சி செய்து வளர்ச்சியடையவும் வேண்டுமானால், இந்திய தேசீய இனங்கள் தங்கள் தங்கள் தாயகங்களில் தங்கள் இஷ்டப்படி சுதந்திர அரசை நிறுவிக்கொள்ளும் சுயநிர்ணய உரிமைபெற்றதாயிருக்கவேண்டும்."

மேலே குறிப்பிட்டுள்ள எனது கொள்கைப்படி தமிழ் நாட்டில் தமிழரசு அமைய முடியும். அதேபோல் ஆந்திர, கேரள, கன்னட மாகாணங்களும் தனித்தனியே பிரிந்து சுய அரசை நிறுவிக்கொள்ளவும் உரிமை பெற்றதா யிருக்கும்.

இந்தக் கொள்கையும் 'திராவிட நாட்'டிற்கு உடன்பாடென்றால் அதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கத் தயாராயிருக்கிறேன். ஆனால், 'திராவிட நாட்'டின் கொள்கை இதற்கு நேர்மாறாக இருப்பதாகத் தெரிகிறது.

தமிழ், ஆந்திரம், கன்னடம், கேரளம் ஆகிய நான்கு மாகாணங்களும் ஒரே திராவிட நாடு என்றும், அவற்றில் வாழும் நான்கு மொழி பேசும் இனத்தவரும் ஒரே திராவிட இனமென்றுமே இதுவரை 'திராவிட நாடு' பிரசாரம் செய்து வந்திருக்கின்றது.

இது அனுபவத்திற்குப் பொருந்தாத கொள்கையென்றே நான் எண்ணுகின்றேன். தன்னைத் திராவிடன் என்று சொல்லக்கூடிய ஆந்திரரையோ, கன்னடரையோ, அல்லது மலையாளியையோ நான் கண்டதில்லை. இதற்கு நேர்மாறாக, மேற்சொன்ன மூன்று இனத்தவரும் தமிழினத்தவரிடமிருந்து பிரிந்து தனித்

தனி அரசுகள் அமைத்துக்கொள்ள துடியாய்த் துடிக்கின்றனர். தமிழர் தங்கள்மீது ஆதிக்கம் செலுத்துவதாகவும் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்த நிலையில், தென்னிந்தியா முழுமைக்கும் ஒரே திராவிட அரசை நிறுவமுடியுமென்று கூறுவதை என்னால் நம்ப முடியவில்லை. ஆந்திரர் ஆதரிக்காத, மலையாளத்தார் மனமொப்பாத, கன்னடத்தார் கைகொடுக்காத நிலைமையில் தமிழ் நாட்டில்மட்டும் 'திராவிடர்' 'திராவிட நாடு' 'திராவிட அரசு' என்ற கோஷங்களை கிளப்பிக்கொண்டிருப்பதில் பயனில்லை யென்பதே எனது பணிவான கருத்து.

ஒரு வேளை, தனித்தனி அரசுகளைக் கொண்ட தமிழ், ஆந்திர, கேரள மாகாணங்களின், கூட்டுறவையே 'திராவிடஸ்தான்' என்று 'திராவிட நாடு' கொள்ளுமாயின் அது சிந்தனைக்குரியதே. ஆனால், அது உடனடியான பிரச்னையல்ல. மேற்படி நான்கு மாகாணங்களும் பிரிக்கப்பட்டு சுய அரசை நிறுவிய பின்னரே இந்தப் பிரச்னை எழுகின்றது. அப்போதுள்ள நிலைமையில், அந்தந்த மாகாணங்களின் சட்ட சபைகளே இதைப் பற்றி முடிவு செய்யவேண்டும். இதையும் எனது நூலிலேயே குறிப்பிட்டுள்ளேன். அது பின்வருமாறு:—

"மத அடிப்படையில் மாகாணங்களின் தொகுதி அமைப்பதற்குப் பதிலாக கலாசார கூட்டுறவின் பேரில் தொகுதியாகச் சேர்ந்துகொள்ள மாகாணங்களுக்கு உரிமை இருக்கவேண்டும். எப்பொழுது, எந்த மாகாணம் அல்லது மாகாணங்களோடு சேர்ந்துகொள்வது என்பதை மாகாண சட்ட சபைகளின் விருப்பத்திற்கே விட்டுவிடவேண்டும்."

இதுமட்டுமல்லாமல், சுயாட்சி பெற்ற இந்திய மாகாணங்கள் அனைத்தும் கொண்ட ஓர் ஐக்கிய சர்க்காரின் அவசியத்தை

எனது நூலில் வற்புறுத்தியுள்ளேன். இதைப்பற்றி 'திராவிட நாடு' தனது கருத்தை வெளியிடவேயில்லை. தேசியவாதி என்ற முறையில் மட்டுமல்ல; தமிழன் என்ற உணர்ச்சியோடு பார்த்தாலும் கூட இந்திய சமஷ்டியில் தமிழ் நாடு தனது நன்மைக்காகவேனும் இணையவேண்டியது அவசியமென்றே நான் கருதுகின்றேன்.

பொதுவாக நோக்கினால்,' இப்போது உடனடியாக தமிழகத்தில் தமிழரசை நிறுவுவது ஒன்றிலேயே நாம் கவனஞ் செலுத்தவேண்டும். கடந்த காலத்தில் தேசியத் தமிழர்கள் இதில் அக்கரை காட்டவில்லை யென்றால் அதற்கு தமிழ் நாட்டின் நலத்தில் அவர்களுக்கு நாட்டமில்லை என்று பொருளல்ல. இந்திய மண்ணிலிருந்து வெள்ளையரை வெளியேற்றுவதற்கான போராட்டத்திலேயே அவர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டியிருந்தது. இன்றோ தேசியப் போராட்டம் ஓர்முடிவான கட்டத்தை நெருங்கி விட்டது. ஆகவேதான் என்போன்ற தேசிய வாதிகளும் கூட தமிழ் நாட்டின் தனி உரிமைகளைப் பற்றி எண்ணவும், எழுதவும் அவசிய மேற்பட்டிருக்கிறது. ஆகவே, கடந்தகாலத்தில் யார்என்ன சொன்னார்கள்; இப்போது என்ன சொல்லுகிறார்கள் என்ற ஆராய்ச்சியில் இறங்குவது பயனற்றது. இப்போதுள்ள பக்குவமான நிலைமையைப் பயன் படுத்திக்கொண்டு தமிழர்களின் நல்வாழ்வுக்கு வழி தேட தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டு மென்பதே எனது வேண்டுகோள்.

---

# தமிழ் முரசு

மு. கோவிந்தசாமி

'வண்டினம் முரலுஞ் சோலை' என்ற தொடரை ஆராய்கையில் முரலுதல் என்ற சொல்லின் தொடர்பாகத்தான் 'முரசு' அமைந்திருத்தல் வேண்டும் என அறிகிறோம். மற்றும், வண்டின் இன்னொலி போன்று, மனதிற்கு இன்பந்தரும் நல்விழவு (மங்கலச் செயல்)களுக்கே இத் 'தமிழ் முரசு' பயன்படுத்தப்பட்டது எனவும் உணர்கிறோம்.

அரசு, அமைச்சு போன்ற சொற்களோடும் இறுதி 'சுகர' முடிவில் ஒத்திருப்பதால், இம்முரசு பெரிதும் 'அரசியல்' தொடர்புடையது என்ற கருத்து வலியுறும்.

'தமிழ் முரசு' பணியாற்றிய துறைகளை வைத்து, மண முரசு, போர் முரசு, காலை முரசு (இறை முரசு), கொடை முரசு எனப் பிரித்தல் மரபு. " திண்பிணி முரசம் இழுமென முழங்க, சென்றமர் கடத்தல் யாவது " என்ற அடிகள் போர் முரசினைக் குறிக்கின்றன. 'இழும்' என்ற ஓசை இனிமையையும் ஆனால் பகைவரை அச்சுறுத்தும்-வலிய உயர்ந்த ஒலியையும் குறிக்கவில்லையா? 'இடிக்குறன் முரசு' என்ற சிலப்பதிகாரத் தொடர் இதன் வலிமையையே உணர்த்துகின்றது. "காலை முரசம் கடையியம்ப" என்ற புறப்பொருள் வெண்பா மாலை அடிகள் காலை (இறை) முரசை யறிவிக்கின்றது. அப்போது தான் வேந்தனைக் காணவந்து காத்துக்கிடந்த சிற்றரசர் 'இறை செலுத்துங்காலம்' இதனை அறிவிக்கவும், காலை மங்கல வொலியாக இசைக்கவும், அன்றைய அரசியல் அலுவல்களைத் தொடங்குதற்கோர் தூண்டுதலாகவுமே அன்று 'தமிழ் முரசு' பயன்பட்டதெனலாம்.

கொடை முரசு என்ற ஒன்றும் இருந்ததாய்த் தெரிகிறது. நாள்தோறும், சிறப்பாக விழா நாட்களில் (வெள்ளணி, முடி சூடல்) அரசன், வந்த புலவர்க்கும், மற்றையோர்க்கும் பரிசில் கொடுக்கையில் அதனை இயம்புவது வழக்கம்.

மதியோ நெடுங்குடை மன்னர் பணிந்து
புதிய புகழ்மாலை வேய - நிதியம்
வழங்குந் தடக்கையான் வான்தோய் நகருள்
முழங்கும் அதிரும் முரசு!

என்று புறப்பொருள் வெண்பா மாலை பேசுகிறது.

இதன் ஒலியை எழுப்பும் 'குறுந்தடி' பதிற்றுப்பத்து என்ற தூய தமிழ் நூலில் 'குணில்' எனப்படுகிறது. இதன் தோல் 'அடிமாட்டின்' தோலல்ல. 'மயிர்க்கண் முரசம்' எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. கொல்லேறு (எருது) இறந்தபின் அதன் தோலை மயிர் போக்காமலே இம்முரசிற்குப் போர்த்து விடுதல் வழக்கு. முல்லை நில மறவரும், மன்னரும் ஏறு (காளை) தழுவுதல் அன்றைய வழக்கம். அதில் மறவன் தான் தழுவி அடக்கிய காளை இறந்ததும், தன்வெற்றி வீரத்திற் கறிகுறியாக அதன் தோலை அப்படியே முரசமாகச் செய்து விடுவான். அம் முரசிற்குரிய மரமும் குணிலும் வரும் வரலாறு தெரியுமா? அது தெரிந்தால் இன்று தமிழன் ஏன் இப்படி உறங்குகிறான்! அதில் அவனது வீரம் வெளிப்படுகின்றது!

பகைவரைவென்றபின்னர் அவரது நாட்டில் (தலை நகரில்) உள்ள காவல் மரத்தை வெட்டிவந்து, அதைக்கொண்டே தமிழன் முரசு செய்தான்; குணில் செய்தான். ஒவ்வோர் அரசனும் தனது தலைநகரில் ஒரு 'காவல் மரம்' வளர்த்து அதனை மிகக் கருத்துடன் பாதுகாத்து வருவான். அதுவே அவன் வீரம்,

வெற்றி, மானம் எல்லாம். அதனைக் கைப்பற்றினால் பகைவன் வென்றதாகவும், இவன் தோற்றதாகவும் பொருள். அதனைக் காக்க அரசன் தன் உயிரையே விட்டுவிடுவான். இன்று பகை நாட்டில் கொடி போட்டுவிட்டால் வென்றதாக நினைக்கவில்லையா? அதுபோல கொடியை எப்படிக் காக்கிறார்கள்! அரசனுடைய வெற்றியும் வீரமும் அழியாமல் பகைவர் காதில் 'இழும் இழும்' என இடிக்கவல்லவா இந்த சூழ்ச்சி செய்தான்! அதோ சேரனை வென்று அவன் காவல் மரத்திற் செய்த முரசொலியல்லவா அது! எனப் பகைவன் அஞ்சுவான் அல்லவா?

தலையாலங்கானம் வென்ற நெடுஞ்செழியன் வஞ்சினங் கூறுகையில், "முரசமொடு ஒருங்ககப்படேஎன் ஆயின், என்னை மக்கள் கொடுங்கோலன் எனக" என உரைக்கிறான். இதனால் தோற்ற அரசரின் முரசைக் கைப்பற்றுதல் சிறந்த வெற்றியின் அறிகுறியாக மதித்தனர் தமிழர்.

அரசன் ஆணையை நாடுமுழுதும் அறிவிக்க இம்முரசே பயன்பட்டது. இதனை அறைவோர் வள்ளுவர்; திருவள்ளுவர் மரபினர். ஆனால், அன்றும் இன்றும் அடிக்கும் பறை வேறு; அதனை அடிக்கும் பறையரும் வேறு. இரண்டையும் குழப்பித் தான் வள்ளுவரைப் பறையராக்கினர் சில அரைகுறை ஆராய்ச்சியாளர்.

இது வைத்திருக்குமிடம் அரண்மனைக்குள் தனியிடம். அங்கு அழகிய பஞ்சணையிட்ட கட்டில் ஒன்று இருக்கும். அதன் மீதுதான் நம் தமிழ் முரசு அமரும். இதனை எடுக்கும்போதெல்லாம் பூவினாலும் நீராலும்வாழ்த்தி வழிபாடாற்றியே எடுப்பது முறையாக இருந்தது. ஓர் நாட்டின் செங்கோல் சிதையாது வளர்க்கும் வெற்றியைத் தருவதல்லவா அது? அவ்வெற்றிக்குரிய வீரவுணர்ச்சியைத்

தட்டி யெழுப்புவதல்லவா? இதனாலேயே இதனை 'முரசுத் தெய்வம்' என்று போற்றினர்.

இந்த முரசுக் 'கட்டிலின் மேல்தான் ஒரு தடவை, பரிசில் கேட்க வந்து களைத்த புலவரொருவர் (மோசிகீரனார்) படுத் துறங்கிவிட அவ்வழி வந்து, இதனைக் கண்டு (முரசு கட்டிலில் தூங்குவது அவமதிப்பாகும்; வேறு யாராவதாக இருந்திருந் தால் விண்ணுலகுதான்) சினந்து, பின் புலவரென அறிந்து இறங்கி, அவர் இளைப்பாறும்படி கவரிகொண்டு வீசினான் ஓர் தமிழ் மன்னனென்றால், இம்முரசின் பெருமைதான் என்னே! மயிற் பீலியொடு உழிஞைமலர் சூட்டிய இம்முரசிற்கு இரத் தப் பலி இடுவதனையும், அதன் கட்டில் சமைந்த மேன்மையி னையும் அழகாகப் பாடுகிறார் புலவர்.

"ஒலிநெடும் பீலியொண் பொறி மணித்தார்
பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை யுருகெழு முரசம்
மண்ணி வாரா வளவை யெண்ணெய்
நுரைமுகந்தன்ன மென்பூஞ் சேக்கை"

என்பதில் கடைசி யிரண்டடிகள் எண்ணெயின் நுரைபோன்ற மலர்கள் பரப்பிய மெல்லிய விரிப்பமைந்த 'கட்டிலை' விளக்கும்.

இன்றைய தமிழகக் கோயில் 'நகார்' மேளங்கள் இதன் வழி வந்ததோ? என எண்ணுகிறேன். இன்றைய போர்களிலும் விழாக்களிலும் 'பாண்டு' மேளங்கள் பரவிவிட்டன.

அரசர் மறைந்து, ஆட்சியிழந்து வீரங்குன்றி வெற்றி மறந்தனர் தமிழர். தமிழ் முரசும் மறைந்தது. 'இழும்' என முழங்கி எதிரியின் அடிவயிற்றைக் கலக்கிய முரசம் ஆண்ட வன் கோயிலில் அனைவர்க்கும் அகமகிழ்வூட்டும் அளவில்

அமைந்தது. உரிமையைப் பறித்துச்சென்ற ஆங்கிலேயன் முரசையுங் கொண்டுபோய் கண்காட்சியில் வைத்துவிட்டானே!

அன்று உலகமெங்கும் தமிழ் முரசொலித்தது. இமயம் சென்றது. சாவகம், சீனம், மலயம், அரபியம், ரோம், கிரீஸ் இந்நாட்டினரின் காதிலெல்லாம் இயம்பியது தமிழ் முரசொலி. யாவரும் ஒலியின் வழித் தமிழகத்தை நோக்கி ஓடிவந்தனர். வாணிபத்தை, முத்தை, மணியை, பட்டைத் தந்தது கொடையாக. ஆனால், இன்று அவ்வொலி தமிழகத்தே மறைந்தது. அந்நாடுகளில் தமிழன்குரல் கேட்கிறது என்ன குரல்! முரசையிழந்த, உரிமையை இழந்த தமிழன், உரிமையை (முரசை) உயிர்ப்பிக்க அந்நாடுகளி லெல்லாம் கடல் கடந்து சென்று போரிட்டு உயிர்விடும்போது ஓ! வென அலறும் கூக்குரல்தான் கேட்கிறது! ஆனால் உரிமை வந்ததா? முரசம் மீண்டதா? ஆனாலும் தமிழர் விட்டபாடில்லை. அன்று வள்ளுவர் திருக்குறளில் அன்புத் தமிழ் முரசை யொலித்தார். பின்னர் கட்டபொம்மு ஆங்கிலேயனை எதிர்த்து 'வீரத் தமிழ் முரசெ'ழுப்பினான். பாரதி தோன்றி பண்டைய 'வெற்றி முரசினை' எட்டு திக்கும் ஒலிக்கக் கொட்டிப் பாடினான். ஆனால், பிற்காலத் தமிழர் செவிசாய்த்தனரில்லை. முறிந்த குணிலை மாற்றிக் கொடுப்பாரில்லை. கிழிந்த தோலைக் காய்ச்சிக் கொடுக்கவும் ஆளில்லை. விரல்விட்ட மரத்திற்கு வேறு கொண்டுவரும் வெற்றி வீரம் எது? ஆனால், இன்று மீண்டும் 'தமிழ் முரசு' முழங்குகிறது. வள்ளுவன் இயம்பிய அன்பு, கட்டபொம்மு காட்டிய வீரம், பாரதி பாடிய வெற்றி, அதனில் விளங்குவதாகுக! மணமுரசாகி மங்கலம் பெருக்குக! புன்மையைச்சிதைத்துப் போர் முரசாக! சுதந்திரக் காலையில் செம்மை சேர்வெற்றி அதிர்ந்துடன் வருக! அருந்தமிழ் முரசில்!

---

# கூடுவிட்ட குருவிக் குஞ்சு !

**வ. உ. சி. சுப்பிரமணியம்**

கோயம்புத்தூர் சிறைக்கோட்டத்தில் ஒரு நாள் கோடைக் காலம்; நண்பகல்; கோடை வெயிலின் வெப்பம் கூறுந்திற மன்று. கானல் பொறி பறந்தது! கைதிகள் எல்லாம் பகல் உணவை உண்டு வெயிற்கொடுமை தாங்கமாட்டாது படுத்து உறங்கினர். உறங்க முடியாது உழன்றனர் சிலர்.

ஒரு கைதி; அரசியல் கைதிதான்! கடுந்தண்டனை விதிக்கப்பெற்றவர். காலையெழுந்ததுமுதல் அச்சுக்கோர்த்துக் கண் பூத்துப் போய்விட்டது அவருக்கு. அரங்கினுள் புழுக்கமும் வெளியே வெம்மையும் தாங்க இயலவில்லை. தனது வேலையை நிறுத்திவிட்டுச் சிறை அரங்கின் கம்பிக்கதவு வாயிலில் வந்து உட்கார்ந்தார். அவர் மனம் சிந்தனைச் சுழலில் சேர்ந்து சுற்றியது. ஆம்! தமது சென்றகால வாழ்க்கையெல்லாம் அவரது எண்ணத்திரையில் ஒருமுறை உயிர்பெற்று ஓடிப் பின் மறைந்தது. கண்களிலிருந்து 'பொல பொல' வென நீர்முத்துக்கள் சிறைக் கொடுமையினால் வாடிவதங்கி மூப்புக்காட்டிய முக நரைகளின் மேலாக உருண்டு உதிர்ந்தன. அரசியல் கைதியாக இருந்தால் என்ன? அவரும் மனிதர்தானே! தாம்படும் கஷ்டத்தையும் தமது குடும்பம்படும் அல்லல்களையும் நினைத்து அவர் மனம் அலைமோதியபோது அம்மன அலையின் நீர்த்திவலைகள் கண்கள் வழியாக வெளியே தெறித்தன. ஒரு நீண்ட பெருமூச்சு வெளிவந்தது. அவர் மார்பு பரந்து உயர்ந்து பின் தணிந்தது.

அரங்கிற்கு வெளியே வானத்தை முட்டும் பனைமரம் ஒன்று. அதன்மேல் 'அடைக்கலக் குருவி' ஜோடி ஒன்று கூடு கட்டிக் குஞ்சு பொறித்திருந்தது. பெரிய குருவிகள் இரண்டும்

இரை தேட வெளியே போயிருந்தன போலும்! அந்தோ பாவம்! வெப்பம் தாங்காத குருவிக் குஞ்சு ஒன்று தனது முன் அரண்மனையை விட்டு 'கீச் கீச்' சென ஒலமிட்டு வெளியேவர எத்தனித்தபோது தவறிவிழுந்து தலைகீழாக பூமியை அடைந்தது. நல்லவேளை! அதற்குப் பறப்பதற்கேற்பக் கிட்டத்தட்ட சிறகுகள் முளைத்து விட்டதால் பூமியில் மோதாதபடிக் கீழே வந்திறங்கி நின்றுகொண்டது. அது தத்தித் தத்திச் சிறை அரங்கின் கல்நடையில் வந்து உட்கார்ந்தது.

என்ன அதிசயம்! இதற்குள்ளாக வானம் இருண்டு பேரிடியுடன் பெருமழை கொட்டிற்று! குருவிக் குஞ்சு, பாவம்! ரொம்ப 'அதிர்ஷ்டக் கட்டை' போலும்! வெப்பம் தாங்காது வெளியே வந்த அதன்மீது மழை அருவி கொட்டினால்........ மழையில் அதன் இறக்கைகள் நனைந்து பறக்க இயலாதபடிக் குளிர் தாங்காமல் வெடவெடத்துக் கொண்டு நடைச்சுவரோடு சுவராய் ஒட்டிக்கொண்டு-விட்டு விட்டுக் 'கீச்' 'கீச்' என அபயக்குரல் கொடுத்துக் கொண்டிருந்தது. என்ன மாறுதல்! வாழ்க்கையே இப்படித்தானே!

குஞ்சுக் குருவிபடும் கஷ்டத்தைப் பார்த்தார் அரசியல் கைதி; அவர் மனம் சுக்கல் சுக்கலாக உடைந்து உருகிவிட்டது! தனது வாழ்க்கையும் குருவியின் வாழ்க்கையும் கிட்டத்தட்ட ஒரே நிலையில் இருந்ததை உன்னினார்; உள்ளம் நொந்து வெந்தார்! அவர் வாய் முணு முணுத்தது.

"ஏ! அடைக்கலங் குஞ்சே! உன் நிலைமையும் இப்படியா ஆகவேண்டும். நான்தான் எனது சுதந்திரத்தைக் கேட்கப்போய் என் கன்று மணிகளை விட்டு இக்காராக் கிருஹத்தில் அடைக்கலம் புகுந்தேன். சுதந்திரமுடைய குஞ்சே! நீ உனது கூட்டிலிருந்து விழுந்து அல்லல் படுகின்றாயே! உன் வாயிலிருந்து

அடிக்கொருதரம் எழும் "கீச்" எனும் மூச்சு நீயும் என்னைப் போல் சுற்றமிழந்து தவிப்பதைத்தான் தெரிவிக்கிறதோ! ஐயோ, உன் நிலைமை என்னையும்விட மிக்க மோசமாக இருக்கிறதோ பாவம்!" என்ற இந்தப் பொருள் அடங்கிய கவி ஒன்று அரசியல் கைதியின் வாயினின்றும் எழுந்தது.

"கூட்டினை விட்ட குரீஇ இக் குஞ்சே நீ
வீட்டினைவிட்ட மிகையால்இக்—காட்டினில்
துன்பமுறு கின்றேன்போல் துன்பமுறு கின்றனையோ!
இன்பமுறும் சுற்றம் இழந்து!

அந்த அரசியல் கைதிதான் – வீரத்தமிழன் வ. உ. சிதம்பரம் பிள்ளை

---

## பார்ப்பன நந்தன்

நந்தனைப் போல் ஒரு பார்ப்பான்—இந்த
நாட்டினில் இல்லை குணநல்ல தாயின்
எந்தக் குலத்தின ரேனும்—உணர்
வின்ப மடைதல் எளிதெனக் கண்டோம்

# உழைப்பில்லாச் சுகம்

போ. குருசாமி

## கந்தப்பன்

விரலிலே நகம் முளைத்த நாளாக முதலாளிக்கு என் உயிரைக்கொடுத்து உழைத்திருக்கிறேன். இன்னமும் சாமி புண்ணியத்திலே உடம்பிலே வலிமை இருக்குமட்டும் உழைக்கத்தான் போகிறேன். கட்டையாக மண்ணிலே சாயுமட்டும் கஞ்சி ஊத்துகிற அந்தச் சீமானுக்கு உழைக்காமல் வேறு யாருக்கு உழைக்கப் போகிறேன்? எங்கள் அப்பச்சி, எங்கள் பாட்டையா, அவர்கள் அப்பன் - இப்படியாக நான்கு தலை முறையாக, முதலாளிக்குப் பரம்பரை 'அடிமை'யாக இருக்கின்றோம்.

சின்னப்பட்டம் பண்ணையார் ஆகட்டும், வெண்ணெய் நல்லூர் முதலாளி ஆகட்டும் - யாராகத்தான் இருக்கட்டுமே— அவர்களுக்கெல்லாம் இந்த மாதிரியாக ஒரு குடும்பமாவது உண்மையாக உழைக்க இருக்கிறதா? எங்களுக்கு என்று ஆண்டவன் நல்ல முதலாளியாகப் பார்த்து அனுப்பினார் என்றுதான் சொல்லவேண்டும். தங்கமான குணம்; தங்கமான பணம்; பேரும் தங்கத்துரை முதலியார்! என்ன பொருத்தம்!

இப்போதுள்ள முதலாளியின் தகப்பனார் - பெரிய முதலாளி - கந்தப்ப முதலியாருக்காக எங்கள் அப்பன் உயிரையே கொடுத்தார். அதுவும் தகும்; அதற்கு மேலும் தகும். அந்தக் குடும்பத்திலே ஓர் ஆபத்தென்றால் இந்த 'அடிமை'கள் தான் தலைகொடுக்க வேண்டும். கந்தப்ப முதலியார் என்னவோ வேலையாக-எலெக்சனோ என்னமோ சொன்னார்கள்-போனபோது வழியிலே எதிரிகள் மடக்கிக் கொண்டார்கள். நேரமோ நடு இரவு.

கூட யாருமில்லே; எங்க அப்பன் மட்டுந்தான் இருந்தார். நொடிக்குள்ளே அத்தனே பயல்கள் கண்ணிலும் மாயமாய் மண்ணைத்தூவிக் கந்தப்ப முதலியாரை அலக்காகத் தூக்கிவந்து மறைந்துகொண்டார். பிறகு.:....பொழுது விடிந்தது எங்கள் அப்பன் உடம்பிலே உயிர் ஊசலாடுவதை முதலாளி பார்த்தார். எவனே ஒரு பயல் விலாவிலே குத்திவிட்டான். முதலாளி படாதபாடு பட்டார்; எப்படியாவது எங்கள் 'அப்பச்சி' எழுந்திருக்கவேண்டுமே என்று அவருக்கு எவ்வளவோ அக்கரை. நூறு ரூபாய் வரைக்கும் செலவுசெய்தார். பயன் ஒன்றுமில்லே. சாகுமுன் என்னைப் பார்த்துச் சொன்ன சொற்களே இன்னும் கேட்டுக்கொண்டேயிருக்கிறேன். "ஐயா கந்தப்பா! முதலாளி பேரையே உனக்கு வைத்திருக்கிறேன். உடம்பிலே உயிர் இருக்கும்வரை அந்தக் குடும்பத்துக்கு உழைக்க வேண்டுமடா! நம் உயிரெல்லாம் முதலாளிக்குச் சொந்தம் என்பதை மறந்து விடாதே. நம் உடம்பெல்லாம் முதலாளி வீட்டுச் சோற்றுலடித்த சுவர்தான். மறக்கவேண்டாமடா. முதலாளி 'ஏய்' என்றால் ஏழு உலகமும் சுற்றத் தயாராய் இருக்கவேண்டும்....."

அன்று அவர் சொன்ன சொல்லே இன்று வரையிலும் காப்பாற்றி விட்டேன். இனிமேலும் இந்தக் கட்டையைப் போடும்வரை என்புத்தி மாறுது. இந்தக் குடும்பத்துக்கு என்று பிறந்த பிள்ளையாண்டான்தான் குலவழக்கத்தையே கெடுத்து விடுவான்போல இருக்கிறது. பாம்பரை வழக்கப்படி அவனுக்கு முதலாளி பேரையே வைத்தேன் – தங்கத்துரை என்று. பேர் வைத்தது மட்டுமா, முதலாளி முதலாளி என்று அவருக்காகவே உழைத்தாய்விட்டது. இந்தப்பயல் மட்டும் என்னவோ மாதிரியாக இருக்கிறுன்.

அறுபது வயதுக் கிழவன் சொல்லுகிறுனே என்பதையும் கேளாமல் தன் குழந்தைக்கு எவன் பேரையோ வைத்துவிட்

டான். தொழிலாளிகளுக்காக உயிரைக் கொடுப்பவன், அப்படி இப்படி...என்று என்னென்னவோ சொல்லிப் பேரை வைத்து விட்டான். 'சின்ன முதலாளி சாந்தப்ப முதலியார் பேர் வை' என்று எவ்வளவோ சொல்லியாயிற்று. கேட்டால்தானே' 'முதலாளிகள் என்றாலே தொழிலாளிகளின் இரத்தத்தை உறிஞ்சும் அரக்கர்கள். அரக்கர்கள் பேரை என் அருமைக் குழந்தைக்கு வைப்பதாவது' என்று மேடைமேலே ஏறிப்பேசுவது போல மட்டுக்கு மிஞ்சிப் பேசினான். அப்புறமும் வற்புறுத்தினேன். 'பேசாமல் வாயை மூடு; உனக்கு ஒன்றும் தெரியாது. முதலாளி என்றால் உனக்குத்தான் தெய்வம். எனக்கு அப்படி ஒன்றுமில்லை. நான் உழைக்கிறேன்; என் உழைப்புக்கு அவன் கூலிகொடுக்கிறான். தானமா செய்கிறான்...' என்று 'அவன் இவன்' என்று வேறே பேசத்தொடங்கி விட்டான். சரி, அதற்கு மேல் பேசினால் மரியாதையில்லை என்று விட்டுவிட்டேன்.

நம் வீட்டுக்குள்ளேதான் இப்படியெல்லாம் பேசுகிறான் என்று எண்ணினேன். 'தொழிலாளர் சங்கம்' ஒன்று உண்டாக்கி இருக்கிறானாம். இவனுக்கென்ன இந்தக் கேடுகாலம். "சாப்பாட்டுக்கு வழியில்லை; சம்பளத்தை இரண்டு மடங்காக்க வேண்டும்; பஞ்சப்படி மூன்று மடங்காக்கவேண்டும்" என்று சின்னப்பயல்களாகக் கூடிக்கொண்டு கூச்சல் போடுகிறார்கள். இதற்கு ஒரு சங்கம், ஒரு கூட்டம், இதற்கெல்லாம் என் மகன் பொறுப்பு...ஐயோ, ஆண்டவனே! இதெல்லாம் பார்க்கவா இன்னும் உயிரோடே என்னை வைத்திருக்கிறாய்? உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைக்கும் பிள்ளையைக் கொடுக்கவா உன்னைக் கும்பிட்டேன்?

## தங்கத்துரை

ஆலையிலே அல்லும் பகலும் உழைப்பவர் தொழிலாளிகள்; உண்டு உறங்கி ஏப்பம் விடுபவன் முதலாளி. முதலாளி

படியளக்க, தொழிலாளி பிழைக்க வேண்டுமாம்! இதென்ன தலைகீழ் முறை! உழைப்பவன் கையைத் தட்டிப் பறிக்கும் கொள்ளைக்காரனுக்குச் சமூகத்தில் மரியாதை, மதிப்பு! உழைப்பவன் வயிறு காய, எலும்பு தெரிய உணவு கேட்டால் அவனை ஏளனம் செய்கிறது இந்தச் சமூகம். பிழைக்க வேண்டுமே என்று கூலி கேட்கிறான் உழைப்பாளி; பணத்தைக் காக்கும் முதலாளித்தெய்வம் மறுக்கிறது. பணம் இருக்க வேண்டிய இடம் உழைப்பாளியின் பெட்டியாயிருக்க, முதலாளி என்றவன் எப்படித் தோன்றினான்? இதெல்லாம் எனக்கு விளங்காத புதிர்களாகவே இருந்தன.

மதுரைக்குப் போனபோது 'நேரம் போகவேண்டுமே என்று ஒரு கூட்டத்துக்குப் போனேன். அன்று ஒருவர் பேசினார்: அருமையாகப் பேசினார். அவர்கூடப் பட்டினத்திலே ஓர் ஆலையில் வேலை பார்க்கிறவர்தானும். அவர் அன்று பேசியதைக் கேட்டபிறகு எனக்கு இருந்த ஐயங்களெல்லாம் நீங்கிவிட்டன.

"முதலாளிகள், சமூகத்தின் 'பகிரங்க'க் கொள்ளைக்காரர்கள். ஆனால் அவர்களுக்குத் தண்டனை கிடையாது. அதுமட்டுமன்று; அரசாங்கத்தார்கூட அவர்களுக்கு மரியாதைப் பட்டங்களெல்லாம் கொடுப்பார்கள். சமூகத்திலுள்ள 'மனிதர்கள்' அவர்களை வழிபடுவார்கள். அவர்கள் என்னென்ன குற்றங்கள் வேண்டுமானாலும் செய்வார்கள்; செய்கிறார்கள். ஆனால், பணம் அவர்கள் குற்றங்களுக்குக் கருந்திரை இட்டுவிடும்.

சரி, அவர்களுக்குப் பணம் எங்கிருந்து வந்தது? எண்ணிலடங்காத தொழிலாளிகள் வயிற்றை இறுக்கிப் பிடித்து இரத்தம் சுண்டிப்போகும்படி உழைப்பதனால் அல்லவா பணம் பெருகுகிறது? இந்தப் பணத்துக்கு உடையவர்கள் உழைப்பாளிகளே. அல்லவா? ஆனால் சமூகத்தில் என்ன பார்க்கிறோம்.

நாங்களெல்லாம் வேலைக்காரர்கள்; முதலாளி வேலை வாங்குபவன்! அவன் ஏவிய வேலையைச் செய்தால் கூலிகிடைக்கும்; கூலிகொண்டுதான் பிழைக்கவேண்டும். எங்கள் உழைப்பால்—தொழிலினத்தின் பெரும்பாட்டால் - கோடிக்கணக்கில் பணத்தை அள்ளியள்ளி மூட்டை கட்டவேண்டியவன் முதலாளி; மூட்டையிலிருந்து சில ஆயிரம் காசையெடுத்துப் 'பிச்சை'போல வீசி எறிய வேண்டியது. அவ்வாறு வீசிஎறியப் பட்ட 'பிச்சை'தான் பாட்டாளி மக்களின் பட்டினியைத் தொலைக்கும் 'சம்பளம்' சம்பளம்! சம்பளம் வாங்கவேண்டியது யார்? உழைப்பவன் சம்பளமா பெறுவது? கூலிக்குரியவன் உழைப்பாளியா? என்ன முறை இது? உழைத்துப் பணத்தைச் சேர்ப்பவர்கள் நாங்கள்; சேர்க்கும் பணத்தைப் பறிப்பவர் முதலாளிகள். பிறகு, முதலாளியின் கையை எதிர்பார்த்துப் பிழைக்கவேண்டியது உழைப்பாளியின் கடமை; கடன்.

முதலாளிகள் என்பவர் சமூகச் செல்வத்தின் தருமகர்த்தர்கள் என்று சில பெரியவர்கள் சொல்கிறார்களாம். பாலுக்குக் காவலாகப் பூனையை வைக்கும் காலத்தில்தான் முதலாளிகளைத் தருமகர்த்தர்களாக ஆக்கலாம் தருமத்தின் கர்த்தர்கள் முதலாளிகள்! இது என்ன கேலிப்பேச்சு!

முதலாளிகளின் வாழ்க்கைத் தத்துவமே சுரண்டலின் அடிப்படையில் எழுந்திருக்கிறது. அவர்கள் தருமத்தைச் செய்வதாவது! இலவம்பஞ்சு மெத்தை எந்தக் காலத்துக்கு வேண்டும், துணி மெத்தை எந்தக் காலத்துக்கு வேண்டும் என்று ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கும் முதலாளிகள், சமூகத்து மக்களின் நலத்தைப் பாதுகாப்பது என்பது நடக்கிற செயலா?

பம்பாயிலே யாரோ ஒரு முதலாளியாம். அவர் ஓர் ஆராய்ச்சி ஒன்று நடத்த ஏற்பாடு செய்தாராம். பிச்சை எடுக்

கும் மக்கள் என்னென்னவோ தந்திரங்கள் செய்கிறார்களாம். காலிலும் கையிலும் பெரும்புண் இருப்பதாகக் காட்டுகிறார்களாம். ஆனால் உண்மைப்புண் இல்லையாம்; இருப்பதுபோல் காட்ட ஏதோ தந்திரத்தைக் கையாளுகிறார்களாம். இதைப் போல எத்தனையோ மறைவான செய்கைகள் செய்து சமூகத்தில் பிச்சை எடுக்கிறார்களாம், அவர்கள் செய்யும் தந்திரங்களை யெல்லாம் அம்பலப்படுத்த வேண்டுமென்று அந்தப் பம்பாய் முதலாளி ஏற்பாடு செய்தாராம்; ஆராய்ச்சிசெய்ய அறிஞர்களும் தயாராக வந்தார்கள். புத்தகமாகக்கூட ஆராய்ச்சிகளை எழுதிவிட்டார்கள்!"

இந்தச் செய்தியை அன்று மதுரையில் பேசியவர் சொன்னார். வயிற்றுப் பிழைப்புக்கு வழி இல்லாமல் பிச்சை எடுக்கிறார்கள். சும்மா பிச்சை கேட்டால் யார் கொடுப்பார்கள்? அதற்காக எத்தனையோ ஏமாற்றங்கள்! அது வஞ்சகச் செயலாக இருக்கலாம்! ஆனால் வயிறு வளர்க்கச் செய்யும் வஞ்சகம். முதலாளிகள் செய்யும் வஞ்சகம்...! அதற்கு எல்லையுண்டா? அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த முதலாளி ஒருவர் பிச்சைக்காரர் தந்திரங்களை ஆராய்கிறார்! பசி ஏப்பக்காரனின் வாழ்க்கையைப் புளி ஏப்பக்காரன் ஆராய்கிறான்! எதற்கு? சமூகத்தின் சொத்தைச் சோம்பேறிகளாகிய பிச்சைக்காரர்கள் வீணாக்குகிறார்களாம். முதலாளிகள்மட்டும் என்ன உழைத்துப் பாழாய்ப் போகிறார்கள்! 'தொப்பை சுமக்கும் தொண்டு' தவிர வேறு என்ன செய்கிறார்கள்?......

இந்த வயிற்றெரிச்சலை யெல்லாம் எங்கே கொண்டு கொட்டுவது? தொழிலாளிகள் முதலாளிகளைத் தெய்வமென்று நினைக்கிறார்கள். முதலாளியிடம் போய் ஒன்று வேண்டுமென்று கேட்கக்கூடாதாம். 'எல்லாம் முதலாளிக்குத் தெரியாததா? அவராகப்பார்த்துத் தருவார்' என்ற மனப்பான்மை நம்மவ

ரிடம் பெருகியிருக்கிறது. இது ஒழிந்தால்தான் உழைப்பாளிகள் உயர வழி பிறக்கும்.

எங்கேயோ போவானேன்? என்பெயரே போதுமே! முதலாளியின் பெயரைத்தானே எங்கள் அப்பா எனக்குச் சூட்டியிருக்கிறார். அது பரம்பரை வழக்கமாம்! அவருக்கும் அவர் தகப்பனருக்கும் முதலாளிகள் பெயர்கள்தான்! பேரளவில்தான் முதலாளியே தவிர சுண்டிச் சுள்ளியாய்க் காய்வதில் பாட்டாளியாகத்தானே இருக்கவேண்டும்!

நன்றியறிவாம்! முதலாளி கொடுக்கும் கூலி பெரிய நன்றியாம். அதற்கு நாம் நன்றியறிவுடையவராக இருக்க வேண்டுமாம்! நன்றியறிவுடையவனாக இருக்கவேண்டியவன் முதலாளி யல்லவா? சோம்பேறியாய்ச் சுகவாழ்வு வாழும் அவனுக்குத் தம் உழைப்பால்வரும் பொருளையெல்லாம் தியாகம் செய்கிற தொழிலாளிகளிடம் முதலாளியல்லவா நன்றிசெலுத்த வேண்டும்! முதலாளி எசமானனாம்! 'எசமான விசுவாசம்' நமக்கு வேண்டுமாம்! தொழிலாளிகள்தான் எசமானர்கள், சமூகச் செல்வத்தின் உடையவர்கள் என்ற முறை ஏற்பட வேண்டும்.

தங்கத்துரை முதலியார் மகன் சாந்தப்பனுக்கு வயது இன்னும் இருபதாகவில்லை. அதற்குள் அவன் என்னென்ன அட்டகாசங்களைச் செய்கிறான்! அவன் ஈடுபடாத தீயசெயல் ஒன்று உண்டா! அவனைச்சொல்ல குற்றம் என்ன இருக்கிறது? பெரியவர்கள் காட்டியவழி இருக்கிறது. அதைப் பின்பற்றுகிறான். கொஞ்சம் இளமையிலேயே தொடங்கிவிட்டான்; அவ்வளவுதான் வேறுபாடு. இந்த அருமைத் திருமகனின் பெயரை என் மகனுக்கு இடவேண்டுமென்று என் அப்பா ஒற்றைக்

காலில் நின்றார்! எஜமான் விசுவாசமாம்; பரம்பரை வழக்கமாம். நம் உடம்பு உயிரெல்லாம் முதலாளிக்குச் சொந்தமாம்!

என்று தான் இந்த மூடத்தனம் ஒழிவது? நாம்தான் இதற்கு வழிகாட்டலாம் என்று முடிவுசெய்து விட்டேன். அப்பா சொன்னதை மறுத்துவிட்டேன். என் கண்ணைத் திறந்துவிட்ட கனகராஜரின் பெயரையே என் மகனுக்கு இட்டேன். தொழிலாளிகளே நாட்டின் உயிர் என்ற உண்மையை விளக்கிய அவர் பெயர்தான் என் மகனுக்குச் சரியானது. அடிமைத்தனத்தின் கடைசிச் சின்னம் என் பெயராகவே இருக்கட்டும்.

'தங்கத்துரை மில்ஸ்' என்ற எங்கள் ஆலைத்தொழிலாளிகளை ஒன்று சேர்த்துவிட்டேன். சங்கம் கூட்டியாய் விட்டது. இனி, தொழிலாளருக்கு வேண்டிய நலன்களெல்லாம் கேட்டுப் பெறவேண்டும். சுரண்டல் இன்னும் எவ்வளவு நாளைக்கு?

இங்கே உழைக்கிறவர்கள் உலர்ந்து சுச்காய் வாடுகிறார்கள். முதலாளி பம்பாயிலே செய்தித்தாள் நடத்தப்போகிறாராம். பக்கத்து ஊரிலே மற்றோர் ஆலை நடத்தப்போகிறாராம். கட்டிட வேலைகூடத் தொடங்கிவிட்டார்கள்.

<u>மாரி ஆயி</u>

அறுபது வயசாகியும் இன்னும் வீட்டில் இருக்கமாட்டேன் என்று ஆலைக்கு வேலைசெய்ய ஓடி விடுகிறார். தங்கத்துரைவேலை செய்கிறான்; அவன் மனைவியும் நானும் வேலை செய்கிறோம். இவர் பேசாமல் வீட்டில் இருக்கக்கூடாதோ? கேட்டால், 'சாகும்வரை உழைப்பது நமது கடமை; இந்த உடம்பே முதலாளிக்கு உரியதுதானே!' என்று பேசுகிறார்.

தங்கத்துரை எவ்வளவோ சொல்லிப் பார்த்துவிட்டான். "சர்க்கார் வேலையிலெல்லாம் ஐம்பது வயசானுல் வேலை செய்யாமலே சம்பளம் வாங்கலாம் என்று சொல்லுகிருர்கள். முதலாளி என்ன வாரிக் கொடுக்கிருர்? போதும் வேலை செய்தது. வீட்டில் பேசாமலிரும்" என்று அவன் சொல்லுகிருன்; சொல்லிக்கொண்டே யிருக்கிருன். கேட்டால்தானே?

அவர் போக்குத்தான் அப்படி யென்ருல், தங்கத்துரை செய்கிற காரியங்களும் எனக்கு ஒன்றும் புரியவில்லை. சங்கமாம் என்னமோ கூட்டமாம். இப்படி யெல்லாம் செய்தால் முதலாளிக்குக் கோபம் வரும். பிறகு வேலை யில்லாமல் திண்டாட வேண்டுமே!

அவனிடம் சொல்லிப் பார்த்தேன். என்னென்னவோ சொல்லுகிருன். அவன் சொல்வதில் நியாயம் இல்லாமலில்லை. இருந்தாலும் வேலை இல்லாமல் திண்டாடக்கூடாதே என்றுதான் நினைக்கிறேன். சொன்னுல் கேட்கமாட்டேன் என்கிருன். ஈசுவரன்தான் காப்பாற்ற வேண்டும்.

பக்கத்து வீட்டு முருகன் செய்த திருட்டு வேலையை இவன் மெச்சிக்கொண்டான். எனக்கு வயிறு பகீரென்றது. புது ஆலைக்கட்டிடத்திலிருந்த காவல் பொம்மைக்குப் போட்டிருந்த சட்டைகளை யெல்லாம் அந்த முருகன் இரவோடு இரவாகத் திருடிப் பக்கத்து ஊரில் விற்றுவிட்டானும். அது மிகவும் சரி என்று என் மகன் பாராட்டினுன்.

"என்னடா இது, இப்படியும் உண்டா?" என்று கேட்டேன். பின்ன என்னவாம்? ஊரிலே உடுத்தத் துணியில்லாமல் மனிதர்கள் திண்டாடுகிருர்கள். முதலாளி கட்டும் கட்டிடத்துக்குத் திருஷ்டி படக்கூடாது என்று ஒரு பொம்

மைக்குக் கால்சட்டை, சட்டை, கோட்டு இதெல்லாம் வேண்டுமாம்! மனிதன் திண்டாடுகிருன்! பொம்மைக்குத் துணி வேறு கேடா?" என்று பேசினன்.

நியாயமாகத்தான் படுகிறது. இருந்தாலும் இது நாளைக்கு வெளியே தெரிந்தால்.........! ஐயோ!....

"சம்பளம் அதிகமாகத் தரவேண்டும். இல்லையென்ருல் வேலைக்கு வரமாட்டோம்" என்று இப்போது பேச ஆரம்பித்திருக்கிருன். 'பிள்ளையாண்டானுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டது' என்கிருர் அவன் தகப்பனர். வேலைக்குப் போகாவிட்டால் கூலி கிடையாமல் திண்டாடவேண்டியது நாம்தானே! இது கூட என் பிள்ளைக்குத் தெரியவில்லையே!

காளியம்மா! என் பிள்ளையை நல்லவழியிலே திருப்பி விடு, தாயே! உனக்கு நாலணு உண்டியில் போடுகிறேன்.

## கந்தப்பன்

சொன்னல் கேட்டால்தானே! ஆ, ஊ என்று கத்தினன். அடங்கமாட்டேன் என்ருன். வேலை நிறுத்தம் என்ருன். கூட இருக்கிற பயல்களும் கூட்வே கத்தினர்கள். கடைசியில் ஒருநாள் எல்லாப்பயல்களும் வேலைக்கு வரமாட்டோம் என்று சொல்லி விட்டார்கள். நானும் இன்னும் சிலரும் வேலைக்குப் போனேம். போகக்கூடாது என்று தடுத்தார்கள்....

விஷயம் வரவர மிகவும் முற்றிவிட்டது. அடிதடி, கொள்ளை எல்லாம் வந்தன. முதலாளிக்கு என் மகனமேல் தான் கோபமெல்லாம். தெய்வம் போலிருந்தவர் என் முகத்தில் விழிக்கவும் மறுக்கிருர். இந்தப் பிள்ளையைப் பெற்றதற்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்.

கடைசியில் அவன் ஆட்டமெல்லாம் என்ன ஆயிற்று? சிறைக்குள்ளே அடங்கிக் கிடக்கிறான்.

பெற்று வளர்த்துப் பெரிய இடத்தில் வேலைக்கு விட்டேன். பிழைக்கத்தெரியாமல் திண்டாடுகிறான். இனி, அவன் வெளியே வந்தாலும் யார் அவனுக்கு வேலை தருவார்கள்?

குடும்பமெல்லாம் கஷ்டப்பட வேண்டும், அதை நானிருந்து பார்க்க வேண்டும் என்று என் தலையெழுத்து! எல்லாம் முதலாளிக்குத் துரோகம் செய்ததனால் அல்லவா விளைந்தது!

## மாரி ஆயி

அப்பாடி, என் கவலை தீர்ந்தது. தங்கத்துரை சிறையிலிருந்து வந்து விட்டான். ஆலையிலும் வேலை ஒழுங்காக நடைபெறுகிறது.

அவனைக் கைதுசெய்து விட்டார்கள் என்றவுடனே ஆலையின் வேலைக்காரர்களிடையே எவ்வளவு ஆத்திரம் ஏற்பட்டது! அவன் இருந்தாலாவது ஒருவேளை வேலைக்குப் போயிருப்பார்கள். அவன் இல்லை என்றவுடன் வேலைக்குப் போவதேயில்லை என்று எல்லோரும் ஒற்றுமையாக இருந்து விட்டார்கள்.

ஒரு மாதம் எல்லோரும் திண்டாடினார்கள். வயிற்றுணவுக்கு ஒரே கஷ்டம். எப்படியோ காலம் கடந்தது. என்றாலும் தொழிலாளர் உறுதி குலையாமல் ஒற்றுமையாக இருந்தார்கள். அத்தனை கஷ்டத்துக்கும் தக்க பலன் விளைந்து விட்டது.

ஆலையை மூடியே வைத்திருந்தால் முதலாளிக்கு வரும் படி ஏது? கடைசியில் அவரும் தளர்ந்தார். தொழிலாளர்கள் கேட்ட யாவும் கிடைத்தன.

அவனும் வீடுவந்து சேர்ந்தான். வயதானவர்களுக்கு மொத்தமாக ஒரு தொகை கொடுத்து ஓய்வெடுக்க ஏற்பாடாயிற்று. எல்லோருக்கும் சம்பளம் இரண்டு மடங்காயிற்று. அவர் வீட்டிலே சந்தோஷமாக இருக்கிறார்.

இப்போது அவரைக்கேட்டால், "பயல் சொன்னதிலேயும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இவ்வளவு கஷ்டமும் ஒற்றுமையாகச் சமாளிக்க வேண்டுமே" என்கிறார்.

"கஷ்டமும் வரும்; ஒற்றுமையும் வேண்டும். கஷ்டமில்லாமல் சுகம் வருமா? கஷ்டப்படாமலே சுகப்பட நினைத்த முதலாளிகள் இப்போது படும்பாடு தெரியவில்லையா?" என்கிறான் அவன்.

"ஆமாம், கஷ்டத்துக்குத்தானப்பா பரிசு" என்கிறார் கிழவர்.

---

## யோகம், ஞானம்

ஊருக் குழைத்திடல் யோகம்—நலம்
ஓங்கிடு மாறு வருந்துதல் யாகம்
போருக்கு நின்றிடும் போதும்—உளம்
பொங்கல் இலாத அமைதி மெய்ஞ்ஞானம்

—பாரதியார்

# பாரதியின் வாழ்த்து!

ம. பொ. சிவஞானம்

(சென்னை அரசியலார் கல்லூரியில் 5-9-'46 அன்று திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடந்த பாரதி விழாவில் பேசியது)

"பாரதியை நினைக்கும்போது அவரது மீசைதான் கண் முன் தோன்றுகிறது. அது தமிழன் வீரத்தின் அறிகுறி" எனத் தலைவர் கூறினர். அதுமட்டுமா? பாரதி பாடலைப் பாடக் கேட்டால் மீசையில்லாதவனுக்கும் வீரம் பொங்கக் காண்கிறோம். இன்னமும் சொன்னால், படித்தறியாத - பஞ்சத்திலடிப்பட்ட கிழவனேனும் பாரதியின் பாட்டிசைக்கக் கேட்பானாகில்,

துடித்தெழுந்து தன்மெலிந்த தோளைக்கொட்டித்
தொளைமிகுந்த கந்தலுடைச் சுறுக்கிக்கட்டி
எடுத்தெறிய வேணுமிந்த அடிமைவாழ்வை
இப்பொழுதே இக்கணமே என்றெனுரைத்து
அடித்துரைத்து ஆவேசம் கொள்வானென்றால்

பாரதியாரின் பாட்டில் ததும்பும் வீரத்தைக் கூறவேண்டுமோ?

பாரதியார் தம் வாழ்நாள் முழுவதும் தாய் நாட்டின் விடுதலைக்காகவே பாடுபட்டார். உலக நாடுகளின் வரிசையில் தம் தாய்த் திருநாடு சீரழிந்து கிடப்பதையெண்ணி, "மற்றை நாட்டவர் முன் நின்றிடும் போழ்து மண்டுமென் வெட்கத்தின் ஆணை" என்றும், "சுதந்திரத் துவஜம் துளங்கிலா நாட்டிடைப் பிறந்தேன்" என்றும் கண்ணீர் வடித்தார். எண்ணற்ற தேச பக்தர்கள் சிறையில் வாடுவதை நினைத்தபோதெல்லாம்,

"மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ"

எனக் கடவுளிடம் முறையிட்டுக் கதறி யழுதார்.

பாரதியை வருத்திய அந்தத் துன்பநாட்கள் தீர்ந்தது அடிமையிருள் அகன்று வருகின்றது. துன்பச் சிறை அதோ தகர்ந்து கொண்டிருக்கின்றது! அன்று சிறையில் வாடிய தேசபக்தர்கள் இன்று சிம்மாசனமேறி ஆட்சிபுரிகின்றனர். எனவே, அழுது புலம்பிய அந்த பாரதியை மறந்து,

"ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று
ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே"

என்று சுதந்திரத்தைக் கற்பனைக் கண்ணால் கண்டு உள்ளம் குளிர்ந்து பள்ளுப் பாடிய பாரதியின் திருநாளையே இன்று கொண்டாடுவதாக எண்ணுங்கள்.

பாரதியார், பண்டைத் தமிழ்ப் புலவர்களின் வரிசையில் வைத்து எண்ணத்தக்க பெரும்புலவராவார். ஆயினும், பண்டைப் புலவர்களுக்கும் பாரதிக்கும் [illegible] பெருத்த வித்தியாசத்தைக் காண்கிறோம்.

கம்பர், "இறையறிந் துயிர்க்கு நல்கும் இசைகெழு வேந்தன்" என்று அரசனைப் போற்றினார். பாரதியாரோ,

"பொழுதெல்லா மெங்கள் செல்வங் கொள்ளைகொண்டு
போகவோ நாங்கள் சாகவோ
அழுதுகொண்டிருப்போமோ ஆண்பிள்ளைகள் நாங்கள்
அல்லமோ உயிர் வெல்லமோ"

என்று அரசாங்கத்தைத் தூற்றினார். மேலும், கம்பர் தாம் காட்டும் அரசியலில், "உயிரெலாம் உறைவதோர் உடம்பும்

ஆயினன்" என்ற வரியில் மன்னனை உடலாகவும் மக்களை அவ்வுடலில் இயங்கும் உயிராகவும் கொண்டு முடியாட்சியில் குடியாட்சியைப் புகுத்த முயலுகிறார்.

அடிமையைக் கடியவந்த பாரதியாரோ, "நாமெல்லாரும் இந்நாட்டு மன்னர்" என்ற வரியில், மக்களுக்காக மக்களாட்சியே வேண்டும் என்று வற்புறுத்தி மன்னனுக்குக் கம்பன் தந்த சின்ன இடத்தையும் மறுத்து விடுகின்றார். கம்பருக்கும் பாரதிக்கும் உள்ள இந்தக் கருத்து வேறுபாட்டிற்குக் கால வேறுபாடே காரணமாகும்.

கம்பன் சுதந்திர நாட்டிலிருந்து பாடினன்; அவனுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப்பிறகு பாரதி அடிமை நாட்டிலிருந்து பாடினார். கம்பனுக்கும் பாரதிக்கும் இடைக்காலத்தில் தோன்றிய புலவர்கள், மக்களின் வாழ்க்கையொடு இயையாது வானுலகத்திற்கு வழி காட்டும் புராணங்களும், பிரபந்தங்களும் இயற்றத் தொடங்கினர். இதன்பயனாக தமிழ் இலக்கியம், மக்களின் தொடர்பிழந்து புலவர்களின் குடிசைகளிலும், துறவிகளின் மடங்களிலும் சிறைப்பட்டது. இந்தக் காலத்தில்தான் பாரதி தோன்றி தமிழுக்கு விடுதலை தந்தான்.

பிறக்கும்பொழுதே அடிமைத்தளை பூண்ட கோலத்தில் உள்ள அன்னையைத் தரிசித்தான். நாட்டில் சுதந்திர ஒளியற்று எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. இதைக்கண்ட பாரதி,

"தேவி! நின்னொளி பெறாத
தேயமோர் தேய மாமோ?
ஆவியங் குண்டோ? செம்மை
அறிவுண்டோ? ஆக்கமுண்டோ?
காவிய நூல்கள் ஞானக்
கலைகள் வேதங்களுண்டோ?"

என்று உள்ளங் குமுறினன். அந்த உள்ளத் துடிப்பிலிருந்து பாரதிக்கு ஒரு புது வழி புலப்பட்டது ஆம்; இடைக்காலப் புலவர்களிலிருந்து மாறுபட்டு வானுலகைப் பாடாது மக்களின் **வாழ்வைப்** பாடுவதே அவன் கண்ட புதுவழி.

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே" என்கிறார் பாரதி. ஆனல் நாமோ, முன்பு தண்ணீர் குடித்தோம்; அதில் தமிழினிமை தவழ்ந்தது. பின்னர் 'தீர்த்தம் சாப்பிட்டோம்; இன்று 'வாடர்' குடிக்கிறோம். இனி, 'பாணி' பருகுவோம். போலும்!

முன்னர் மனைவியை மணந்தோம்; பின்னர் பாரியைப் பாணிக்கிரகணம் பண்ணிக் கொண்டோம்; இன்று ஒய்வை (Wife) மேரேஜ் (Marriage) செய்துகொள்கிறோம். இவ்வாறு சொல்லில் உயர்வான தமிழ்ச் சொல்லை மறந்து பிறமொழி வயப்படும் பேதையரானோம். உங்களை ஒன்று வேண்டுகிறேன். இனியேனும் எதைக் குடித்தாலும் அதில் தமிழினிமையை கலந்து குடியுங்கள். யாரை மணந்தாலும் தமிழ் மணத்தைக் காதலித்து வாழுங்கள்! கம்பன் கலையை; வள்ளுவன் சொல்லை; கண்ணகியின் வீரத்தை, எழுப்புங்கள்!

நமது மொழி சிதைந்தது; அதனல், அறிவு (புலமை) அடிமையானது. அறிவு அடிமையாக, நாடு பாழானது. இனியேனும் அறிவு ஓங்க, அடிமை மடிய, மொழிப்பற்றும் இனப்பற்றும் கொண்டு பாரதியின் பாடல்களைப் படியுங்கள். அவரது அரிய நண்பர் வ. உ. சிதம்பரம் பிள்ளையின் வீரத்திறத்தை வணங்குங்கள். அன்றே நம் உள்ளத்தில் உரிமைக் கனல் எழும்பி அடிமைத்தனம் சாம்பலாகும்.

பாரதியும் காவிய மெழுதினர்; கடவுளைப் பாடினர். ஆனல், தோற்றார். கருத்து சுரக்கவில்லையா? கை நீளவில்லை

யா? இல்லை. அன்று அவன் பாட்டிற்கு ஊக்கமளிக்க வேண்டிய உள்ளம் சுழன்றது வேறிடத்தில். அவ்விடந்தான் சுதந்திரப் போர் முனை.

'பாஞ்சாலி சபதம்' என்றோர் காவியம் பாடினார் பாரதி. அதில் வில்லியெழுதிய நல்ல தருமரைக் காணோம். வில்லிபுத்தூரார், பகடையாடி நாட்டைப் பறித்ததற்காகத் துரியோதனனைப் பழிக்கின்றார். ஆனால், பாரதியார் தாம் பாடிய 'பாரதத்தில்' மண்ணை வைத்துச் (நாட்டை வைத்து) சூதாட மாவேந்தனேனும் தருமருக்கு என்ன உரிமை யுண்டு? என மனங்கொதித்துத் திட்டுகிறார். அந்தக் கட்டத்தில் பாரதியார் பாடவில்லை; நடிக்கிறார்.

நமது உள்ளத்தில் அறம் வேண்டும்; அதனினும், செயலில் மறம் இருந்தால் சிறப்பு. இரண்டும் அற்றோர் மக்களல்ல; மாக்கள் (விலங்குகள்). விலங்குக்கும் நல்ல உரிமையுணர்ச்சி யுண்டு. அறம், மறமற்ற மாந்தர்க்கதுவு மில்லையே. பாரதி மற உணர்ச்சியற்ற மக்களை 'வீரமிலா நாய்கள்' என வெறுப்புடன் இடித்துப் பேசுகிறார். ஆம், பல்கலை பயின்ற அறிஞரெல்லாம், பதவி ஆசையில் மயங்கி அடிமையைத் தாங்கும் தூணாக நின்றால், வீரம் எங்கிருக்கும்? அன்றி அறந்தான் சிறக்குமா? பாரதி, மக்களின் அறியாமையைக்கண்டு ஆத்திரங்கொண்டார்.

கஞ்சி குடிப்பதற் கிலார்—அதன்
காரணங்கள் இவை யென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சமென்றே—நிதம்
பரதவித்தே உயிர் துடிதுடித்து
துஞ்சி மடிகின்றாரே—இவர்
துயர்களைத் தீர்க்கவோர் வழியில்லையே

என்றார். நெஞ்சு பொறுக்க முடியாத நிலைகெட்ட வாழ்வை நினைக்க நினைக்க அவனுக்கு ஆத்திரம் வருகிறது. அந்த வெறுப்புக் கனலும் உள்ளத்தோடு ரஷ்யப் புரட்சியைப் பாடுகிறான்; அது காளியின் கோபக்கூத்தாக அவன் அறிவில் ஆடுகின்றது. ரஷ்யாவில் 'மாகாளி'யின் ஆட்டம் மாமன்னன் ஜாரை மாள வீழ்த்துகிறது. கொடுங்கோலன் ஜார் 'ஆகா' என அலறிச் சாகிறான். அவன் அரசும் ஆடி வீழ்கிறது. அவனுடன் சேர்ந்த சமயச்சதிகாரர்களும் சாய்ந்து விழுகின்றனர். பாரதியின் கோபம் அடிமையை மடிக்கிறது; அவன் பூரிப்பு உரிமையை வரவேற்கிறது.

தாயின் மணிக்கொடி பாரீர்' என்ற பாடலில், இந்திய சமுதாயத்தை இனவாரி பிரிக்கிறார். அவர் மதத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் மொழியைக் கொண்டே இனங்களைப் பிரிக்கிறார். செந்தமிழ் நாட்டார், சேரத்து மக்கள், சிந்தை துணிந்த தெலுங்கர், கன்னடர், காலனும் அஞ்சும் மராட்டர், பஞ்ச நதத்துப் பிறந்தோர் ஆகிய பல் வேறு இனத்தவரும் தனித்தனியாக அணிவகுத்து தாயின் மணிக்கொடியின் கீழ்நின்று "எங்கள் நல்லுயிர் ஈந்தும் இக்கொடியினைக் காப்போம்" என்று சபதம் செய்யும் "அந்த அற்புதக் காட்சியோர் ஆனந்தமன்றோ" என்று கூறி பாரதி அகங் களிக்கிறான். ஆம், இனவாரி சுதந்திரம்தான் இந்தியாவின் ஐக்கியத்தைக் காக்கும் என்ற உண்மையை இந்தப் பாடல் உணர்த்துகின்றது.

இன்று எழுந்துள்ள இன உணர்ச்சியைக் கற்பனைக் கண்ணாற்கண்டு பாடினானே, அந்த பாரதியை நினைப்போமாக! அப்போது நம் இருதயத்தில் ஓர் இறுமாப்பு கிளர்ந்தெழும்; தமிழன் என்ற உண்மை உணர்ச்சி உள்ளத்தே பொங்கும்; தமிழ் மொழியில் உயிர்ப்பற்று உண்டாகும்; தன்னம்பிக்கை பிறக்கும்.

தமிழராகிய நம்மை இன்று வெள்ளையன் மட்டுமல்லாமல் வேற்று இனத்தவனும் சுரண்டுகிறான். ஆங்கில மொழி மட்டு மல்லாமல் நம் நாட்டிலேயே உள்ள அயல் மொழியும் தமிழ் மொழியை அடிமைப் படுத்துகிறது. நம்மிடம் தன்னம் பிக்கையில்லை; மார்தட்டித் தமிழன் என மானமின்றிப் பேசு கிறோம். "நாமமது தமிழரெனக் கொண்டு வாழ்கின்றீர்! போ, துமா?" என நகைக்கிறார் பாரதி. அகண்ட இந்துஸ்தானமா? ஆகட்டும். அகில இந்தியாவிற்கும் ஒரே சர்க்காரா? உடன்பாடு. ஆனால் பாரதி பாடிய இனங்கள் அழியக்கூடாது; அந்த இன வாரியே அரசுகளும் அமையவேண்டும். அந்த இன அரசுகள் அடங்கிய ஐக்கிய இந்தியாவே தமிழன் குறிக்கோள்.

இன்று வடநாட்டில், மதவெறி கொண்டு மக்கள் மடிந்து குவிகின்றனர். பாரதி காட்டிய தமிழ்ப்பண்பை அவர்கள் உணரவில்லை.

"முப்பதுகோடி முகமுடையாள் உயிர் மொய்ம்புற ஒன்று டையாள்; அவள் செப்பும்மொழி பதினெட்டுடையாள் எனிற் சிந்தனை ஒன்றுடையாள்" என்கிறார் மக்கள் முகமனைத்தும் மாதாவின் முகங்கள் என அவர் கற்பனை செய்கிறார். மக்களில் ஒருவர் இழிவு செய்யப்பட்டாலும், ஒரு மொழிக்கு (இனத் திற்கு) கேடு சூழ்ந்தாலும், பாரத அன்னைக்குக் கேடுசெய்தது போலாகும் அல்லவா? மதக் கண்கொண்டு அரசியலைக்காண் போர் முகம்மதிய மாகாணம், இந்து மாகாணம் எனவும் மல லாடத் தொடங்கிவிட்டனர். என்ன மதியீனம்!

மொழியால் இனம் பிரித்த பாரதி, அந்த இனங்களை யெல்லாம் அவர் எந்தச் சாதி, மதமாயினும், ஒன்றாக அணைத்து அன்பு பாராட்டுகிறார். அவர் அனைத்திந்தியா வையும், அனைத்துலகையும் தமிழ்க் கையால் தழுவுகிறார்.

ஏன்? ஓர் நாள், தமிழ்ப்பண்பு இந்தியா முழுவதிலும் தழைத்திருந்தது. இதை மோகன்ஜதாரோ ஆராய்ச்சி காண்பிக்கவில்லையா?

சிந்து நதியிலே ஓடம் விடுகிறான் பாரதி. நிலவொளி வீசுகிறது; நல்ல தென்றல் தவழ்கிறது. காதல்தானே இங்கு மலர வேண்டுவது? பாண்டிய (தமிழ்) நாட்டு இளைஞனைப் பிடித்து சேரப் பெண்ணின் அண்டையில் உட்காரவைக்கிறான். ஓடப் பாட்டு வேண்டுமே! 'சுந்தரத் தெலுங்கினில்' பாட்டிசைக்கின்றனர் தென்னாட்டுக் காதலனும், காதலியும். அறிவுக் கண் கொண்டு பாரதியை நோக்குங்கள்! இங்கு மதமா தோன்றுகிறது? மாகாணப் பிரிவுணர்ச்சியா மயக்குகிறது? தமிழ்க் காதல் மதத்தையும் மாகாணத்தையும் மறக்க வைக்கிறது!

இந்திய இனங்கள் ஒன்றோடொன்று வாழ பண்டமாற்று வாணிபத்தைக் கூறுகிறார் பாரதி. கங்கையின் கோதுமைக்குக் காவிரி வெற்றிலையைப் பண்டமாற்றுகிறார். பட்டினப் பாலையின் பண்பை, பழந்தமிழர் வாழ்க்கையை இதில் பார்க்கிறோம். "நீ, வைடமினைத் (கோதுமை) தந்தால், நான் கால்சியம் (வெற்றிலை) தருவேனேயன்றி, பணந்தந்து தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தைப் பாழாக்கமாட்டேன்" என்கிறார்.

மராட்டியப் புலவன், தமிழன் தன்னரசாட்சி மன்றம் புகுகிறான். தமிழ் வீரத்தைப் பாடிய பாடலொன்றைத் தருகிறான். மாற்றாகத் தமிழன் பணமோ, நோட்டோ, செக்கோ கொடுத்தானா? இல்லை. தனது வீரத்தால் வீழ்த்திய யானையின் 'வீரத்தந்தம்' பரிசளிக்கிறான். இதை,

> சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டு
> சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்

என்ற வரிகளில் பார்க்கிறோம்.

பணக்காரனுக்குப் பாரதி வழங்கிய பட்டம் பிரபு அல்ல; திருடன். வள்ளுவரும் கம்பரும் வகுத்த தமிழ்ப் பொதுவுடைமையைப் பாரதியும் வரவேற்கிறான்.

‘ இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும் ’

என்றார் வள்ளுவர். இயற்கையன்னை யாவர்க்கும், வேண்டிய யாவுந் தருகிறாள். அதனை அரசும், பண மூட்டையும் அபகரித்துக்கொண்டு, மக்கட்குச் சோறில்லை, துணியில்லை என்ற நிலையைத் தோன்ற விடுகின்றன. இல்லையென்ற இந்நிலை கண்டு எல்லாந் தந்த அன்னை (நிலமென்னும் நல்லாள்) நகுகின்றாள் என்கிறார் வள்ளுவர். இதைத்தான் பாரதியும்,

வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்—இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்—பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்

என்று பாடினார் பாரதி. தனது கடைசிப் பாடலை இதோ, இந்தத் திருவல்லிக்கேணி கடற்கரையில் நின்றுதான் பாடினார்; மக்கள் நிறைந்த கூட்டத்தில் அவரது மணிக்குரல் கேட்டது; அதுதான் பாரதியின் இறுதிக்குரல். அந்தக் குரல், “பாரத சமுதாயம் வாழ்க!” என வாழ்த்தியது. ஆம்; இன்று இந்தக்கடலில் வீசும் ஒவ்வொரு அலையொலியும் “பாரத சமுதாயம் வாழ்க!” என்னும் வாழ்த்தொலியாகவே என் காதுகளுக்குக் கேட்கிறது.

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக் கொரு புதுமை—வாழ்க !
பாரத சமுதாயம் வாழ்கவே!

# திராவிடர்: உழைப்பாளிகள்

ஜி. ஏ. கிரீயர்ஸன்

திராவிடர்கள்தான் இந்தியாவின் பழங்குடிகள்.

பொருளீட்டும் பெருமுயற்சியும் பேருழைப்பும் வாய்ந்தவர்கள் திராவிடர்களே.

தமிழர்கள் என்றால் உழைப்பாளிகள். அல்லது தொழிலாளிகள் என்றே பொருள் கொள்ளலாம். ஏனெனில், மெய் வருந்திப் பாடுபட்டுப் பொருள் தேடி வாழ்வது அவர்களுக்கே உரித்தாக இருந்து வந்திருக்கிறது.

சதுப்பு நிலங்களில் மாடுபோல் உழைக்கவேண்டுமானாலுஞ்சரி; இரங்கூன் சிங்கப்பூர் போன்ற நலநகரங்களில் தெருப் பெருக்கிக் குப்பை கொட்ட வேண்டுமானாலும் சரி; மற்றும் இத்தகைய உடல் வருத்தும் வேலைகள் எவையாயினும் சரியே, அவற்றிற் கெல்லாம் ஈடு கொடுத்துப் பாடுபடுபவர்கள் திராவிடர்களே.

மெய்வருந்திப் பாடுபடுவதே தொழிலாகக் கொண்டு வந்திருந்தவர்களெல்லாம் திராவிடர்களே என்று எளிதிற் கூறிவிடலாம்.

பெகு, பினாங்கு, சிங்கப்பூர் முதலிய கீழை நாடுகளில் காணப்படும் கலிங்கர்களிற் பெரும்பாலோர் திராவிடர்களே. மோரீசுக்கும் மேலை இந்தியக் குடியேற்ற நாடுகளுக்கும் சென்றுள்ள கூலி மக்களிற் பெரும்பாலோர் திராவிடர்களே.

சுருங்கக் கூறின், பொருள் திரட்டும் வழி அமைந்துள்ள இடங்களிலெல்லாம் திராவிடர்களைக் காணலாம். சோம்பேறிகளாய் நகரத்தில் அழுக்குப்படாமல் வாழ விரும்புஞ் செல்வர்கள் இருக்குமிடங்களிலெல்லாம் திராவிடர்களை அணியணியாய்க் காணலாம். இஃதொன்றைக் கருதின் திராவிடர்களைக் கீழைநாட்டுக் கிரேக்கர்கள் அல்லது ஸ்காட்ச்கள் என்று கூறலாம் போலும்!

இந்துக்கள் என்று அழைக்கப்படும் பெருந்திரளான மக்களிடையே குருட்டு நம்பிக்கைகள் மலிந்து காணப்படும் என்று கூறுவதுண்டு. ஆயினும், அக்குருட்டு நம்பிக்கைகள் மிகவும் குறைந்த அளவிற் காணப்படும் ஒரு பகுதியினர் அவர்களுள்ளும் இருக்கின்றனர் என்றால் அவர்கள் திராவிடர்களேயாம்.

குறிப்பு:—"மொழி யாராய்ச்சி" என்ற ஆங்கிலக் கட்டுரையின் தொகுப்பு.



# ஸ்ரீ. ஆர். கிருஷ்ணமூர்த்தி பாகவதர்

(கணக்கு நிபுணரான ரிடையர்டு டிபுடி கலெக்டர்
ஸ்ரீ. வி. ராமஸ்வாமி அய்யரின் குமாரர். இவர்)

நாடகாசிரியர் - நடன போதகர் - சங்கீத வித்வான் - ஹரிகதா காலக்ஷேபம் செய்வார் - வடமொழி, தெலுங்கு, தமிழ், முதலிய பாஷைகளில் பாடல்கள் இயற்றுவார் - கதை, சம்பாஷணை தயாரிப்பவர் - பாரதி பாடல்களுக்கு இசை அமைப்பதில் பிரத்தியேகத் திறமை வாய்ந்தவர். சீக்கிரமே தகுந்த உபாத்தியாயினிகளைக் கொண்டு சங்கீத நடனப் பள்ளியை தியாகராயநகரில் ஆரம்பித்து நடத்தப் போகிறார்.

விவரங்களுக்கு :—

**ஆர். கிருஷ்ணமூர்த்தி பாகவதர்,**

C/o பாரத் கபே, பாண்டி பஜார், தியாகராயநகர், சென்னை.


தீபாவளி
ரிலீஸ்
ருக்மாங்கதன்
ஜி.என்.பி. • யோக-மங்களம்
டைரக்ஷன்:
P.S.V. அய்யர்
P.A. பெரியநாயகி • P.A. ராஜாமணி
L. நாராயண ராவ் • C.T. ராஜகாந்தம் • M.S. சம்பந்தம்
பாட்டு:
சிவன்
சங்கீதம்:
ராமநாதன்
ஸ்டுடியோ:
ஜெமினி

# DENTOMAG—டென்டோமாக்

## ஸ்வாதி—பற்பொடி

வெற்றிலைப் பாக்கு உபயோகிப்பதால் 'டார் டார்' என்னும் காவியும்; பீடி சிகரெட் குடிப்பதால் 'நிகோடின்' என்னும் புகைக் காவியும் பற்களிலும், பல்லின் இடுக்குகளிலும் ஏற்படுகின்றன. அவைகள் சரியானபடி போக்கப் படாவிட்டால், பற்களுக்கும், பிறகு தேகத்திற்கும் கெடுதலை உண்டாக்கக்கூடிய கிருமிகள் உற்பத்தியாகின்றன. ஆகையினால் அவைகள் மனிதர்களின் சுகவாழ்விற்கே உலை வைக்கும் எதிரிகளாகின்றன.

மேற்கூறிய காவிகளை அகற்றவேண்டியது நம் முதல் கடமை. **'ஸ்வாதி' பற்பொடியில்** காவிகளை அகற்றவும், அவைகளில் கிருமிகள் உற்பத்தியாகியிருந்தால் அவைகளை நாசம் செய்வதற்குமான தகுந்த ரசாயன சத்துக்கள் அடங்கிய சாமான்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன

பயோரியா, ஈருகளில் ரத்தம் வாய் நாற்றம் முதலியவைகளையும் போக்கக்கூடிய ரசாயன சத்துக்களும் கலக்கப்பட்டிருக்கின்றன.

'ஸ்வாதி' பற்பொடி மேற்கூறிய யாவற்றையும் சீக்கிரமாய்ப் போக்கி பற்களைப் பால்போல் வெண்ணிறமாக்கும்.

**ஸ்வாதி பிராடக்ட்ஸ் லிமிடெட்.**

**தபால் பெட்டி 655, மதருஸ்**

Printed at The Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Mannady, Madras. O H No 264-D.